**<u>கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்– 01</u>**

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் மறுவரையறை ஆணையம், உறுப்பினர் செயலர் கடிதம் ந.க.எண். 3174/2017/(இ.ஜி–1) நாள்.15.10.2017ல் கண்டுள்ளவாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் வார்டுகள் மறுவரையறை ஒழுங்குமுறை விதிகள் 2017–ன்படி வரையறுக்கப்பட்ட வார்டுகள் மறுவரையறை செய்வதற்கான கொள்கைகள் மற்றும் அளவுகோல்களின்படி, கடையநல்லூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளின்படி நடைமுறை சாத்தியத்திற்கு உட்பட்டும் மற்றும் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் அடிப்படையிலும், இந்நகராட்சியின் ஒவ்வொரு வார்டிலும் மக்கள் தொகை ஒரே மாதிரியாக இருக்கும் வகையிலும், ஏற்கனவே நடைமுறையிலிருந்த 33 வார்டுகளின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமுமின்றி, வார்டுகளின் எல்லைகள் மறுவரையறை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு மறுவரையறை செய்யப்பட்ட வரைவு செயற்குறிப்பு (படிவங்கள் மற்றும் வரைபடங்கள்) தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் கடிதம் ந.க.எண்.3174/2017/தே.பொ1–3, நாள்.28.12.2017ன்படி ஏற்கப்பட்டது. மேற்கண்ட வரைவு செயற்குறிப்பின் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் மறுவரையறை ஆணைய ஒழுங்குமுறை விதிகள் 2017விதி 8(c)(d)(e)(f)(g)(h)(i)– களின்படி கடையநல்லூர் நகராட்சி வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மீதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் ஆட்சேபனை/ கருத்துக்கள் பெறப்பட்டது. மேலும் அவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, இறுதியாக மறுவரையறை ஆணைய தலைவர் அவர்கள் தலைமையில் 08.02.2018 அன்று தூத்துக்குடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வைத்து நடைபெற்ற மண்டல அளவிலான கூட்டத்தில் வார்டு மறுவரையறை சார்பாக பெறப்பட்ட ஆட்சேபனை/ கருத்துக்களின் மீது இறுதி முடிவு எடுக்கப்பட்டது. அவ்வாறு எடுக்கப்பட்ட இறுதி முடிவுகளின் அடிப்படையில் கீழ்கண்டவாறு இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வார்டு எண். | மொத்த மக்கள் தொகை | வார்டு எல்கைகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | வடக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 3039 | நகராட்சி எல்லை | நகராட்சி எல்லை | வார்டு 2,3 | நகராட்சி எல்லை |
| 2 | 2468 | வார்டு 1 | நகராட்சி எல்லை | வார்டு 4 | வார்டு 3 |
| 3 | 2548 | வார்டு 1, நகராட்சி எல்லை | வார்டு 2, 4 | வார்டு 5 | நகராட்சி எல்லை |
| 4 | 2744 | வார்டு 2 | நகராட்சி எல்லை | வார்டு 7, 8 | வார்டு 3, 5 |
| 5 | 2514 | வார்டு 3 | வார்டு 4 | வார்டு 6 | நகராட்சி எல்லை |
| 6 | 2508 | வார்டு 5 | வார்டு 7 | வார்டு 11 | நகராட்சி எல்லை |
| 7 | 2471 | வார்டு 4 | வார்டு 8 | வார்டு 10 | வார்டு 6 |
| 8 | 2587 | வார்டு 4 | வார்டு 4, 10 | வார்டு 10 | வார்டு 7 |
| 9 | 2847 | வார்டு 10 | நகராட்சி எல்லை | வார்டு 14, 15 | வார்டு 12 |
| 10 | 2587 | வார்டு 7, 8 | வார்டு 4 | வார்டு 9 | வார்டு 11, 12 |
| 11 | 2491 | வார்டு 6 | வார்டு 10 | வார்டு 12 | நகராட்சி எல்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | 2508 | வார்டு 11 | வார்டு 9 | வார்டு 13 | வார்டு 13 |
| 13 | 2827 | வார்டு 12 | வார்டு 20 | வார்டு 18 | வார்டு 26, நகராட்சி எல்லை |
| 14 | 2876 | வார்டு 9 | வார்டு 15 | வார்டு 15, 17 | வார்டு 9, 12 |
| 15 | 2940 | வார்டு 9 | நகராட்சி எல்லை | வார்டு 16, 17, 21 | வார்டு 14 |
| 16 | 2621 | வார்டு 15 | நகராட்சி எல்லை | வார்டு 21, 22, 23 | வார்டு 15, 21 |
| 17 | 2930 | வார்டு 14, 15 | வார்டு 21 | வார்டு 21, 25 | வார்டு 20 |
| 18 | 2627 | வார்டு 13 | வார்டு 20 | வார்டு 19 | வார்டு 19, 27 |
| 19 | 2863 | வார்டு 18 | வார்டு 20 | வார்டு 20 | வார்டு 26 |
| 20 | 2886 | வார்டு 19 | வார்டு 17, 25 | வார்டு 26 | வார்டு 26 |
| 21 | 2923 | வார்டு 15, 16 | வார்டு 22 | வார்டு 25, 33 | வார்டு 17, 25 |
| 22 | 2544 | வார்டு 16, 23 | நகராட்சி எல்லை | வார்டு 24 | வார்டு 21 |
| 23 | 2478 | வார்டு 16 | நகராட்சி எல்லை | வார்டு 22 | வார்டு 22 |
| 24 | 2587 | வார்டு 22 | நகராட்சி எல்லை | வார்டு 21, 33 | வார்டு 21 |
| 25 | 2840 | வார்டு 17, 21 | வார்டு 21, 33 | வார்டு 32 நகராட்சி எல்லை | வார்டு 26 |
| 26 | 2963 | வார்டு 20 | வார்டு 25 | வார்டு 27, 29, 32 | நகராட்சி எல்லை |
| 27 | 2866 | வார்டு 26 | வார்டு 26, 29 | வார்டு 28 | நகராட்சி எல்லை |
| 28 | 2963 | வார்டு 27 | வார்டு 27, 30 | வார்டு 29 | நகராட்சி எல்லை |
| 29 | 2930 | வார்டு 28 | வார்டு 30, 32 | வார்டு 30 | வார்டு 27, 28 |
| 30 | 2750 | வார்டு 29, 32 | வார்டு 31, 32 | வார்டு 31 | வார்டு 29 |
| 31 | 2956 | வார்டு 30, 32 | நகராட்சி எல்லை | நகராட்சி எல்லை | வார்டு 29 |
| 32 | 2777 | வார்டு 25, 26 | வார்டு 25 | வார்டு 30, 31 | வார்டு 29, 30 |
| 33 | 2906 | வார்டு 21, 24, 25 | நகராட்சி எல்லை | நகராட்சி எல்லை | வார்டு 25 |

மேற்கண்ட இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துருவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு மறுவரையறை ஆணைய ஒழுங்கு முறை விதிகள் 2017 விதி 8(j)(k)(l)– களின்படி தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்திற்கு சமர்ப்பித்து அரசால் இறுதி அறிவிக்கை வெளியிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 2958 /2017/அ3)**

**<u>தீர்மானம் எண். 38</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 02</u>**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்படும் வாகனங்களை இயக்குவதற்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் மேற்காணும் வாகனங்களை இயக்க முடியாத நிலை உள்ளது. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியத்தை கருத்திற்கொண்டு Out sourcing முறையில் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தக்காரர் மூலம் தகுதியுள்ள ஓட்டுநர்களை பணியிலமர்த்தி பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.81, நாள். 30.12.2016ன்படி ஒப்புதல்

அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வரப்படுகின்றது. இந்நிலையில் மேற்காணும் பணியின் ஒப்பந்த காலம் 02.01.2018 தேதியுடன் முடிவடைகிறது. எனவே மேற்காணும் பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு Out sourcing முறையில் இந்நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதார பிரிவில் பராமரிக்கப்படும் வாகனஙகளுக்கு தேவையான ஒட்டுநர்களை 2018–2019ம் ஆண்டிற்கு PWD விலை விகித பட்டியலின்படி பணியிலமர்த்தி இயக்குவதற்கு உத்தேச மத்திப்பீட்டுத் தொகை ரூ.9.25 இலத்திற்கு அஙகீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்காணும் பணிகளுக்கான செலவீனத்தொகைகளை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ள அஙகீகாரத்திற்காக.

**(ந.க.எண். 183 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 39</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 03</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் 28.01.2018 அன்று நேரடி ஆய்வில் தெரிவித்துள்ளபடியும் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் , சென்னை அவர்கள் டெஙகு காய்ச்சல் தடுப்பு பணிகள் மற்றும் குடிநீர் விநியோகப் பணிகள் தொடர்பாக 30.01.2018 அன்று நேரில் வருகை புரிந்து இந்நகராட்சி அனைத்தப் பகுதிகளையும் ஆய்வுகள் மேற்க்கொண்டனர். மேற்காணும் ஆய்வின் முடிவில் நகரில் டெஙகு காய்ச்சல் பரவி வருவதை போர்க்கால அடிப்படையில் தடுக்கும் பொருட்டு நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் அனைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குளோரின் கலந்து விநியோகம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் டெஙகு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் நிமித்தமாக குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் இந்நகராட்சியின் மூலம் பராமரிக்கப்படும் 13 எண்ணம் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு புதிய குளோரினேசன் பிளாண்ட் (Chlorination Plant) நிறுவி நகருக்கு குளோரின் கலந்த குடிநீரினை விநியோகம் செய்யவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 57,50,000/–(ரூபாய் ஐம்பத்தி ஏழு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) க்கு அஙகீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்நகராட்சிப் பகுதியில் டெஙகு காய்ச்சல் பரவி வருவதை போர்க்கால அடிப்படையில் தடுக்கும் பொருட்டு குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் இந்நகராட்சி தனி அலுவலர் 31.01.2018 அன்று முன் அனுமதி வழஙகியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அஙகீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 871 /2017/இ1)**

**<u>தீர்மானம் எண். 40</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 04</u>**

இந்நகராட்சி ஆணையாளர் குடியிருப்பு வளாகத்திலுள்ள (Booster Station ) குடிநீர் மேல்நிலை தொட்டிகளிலிருந்து தேசிய நெடுஞ்சாலையில் குடிநீர் விநியோகம் செய்வதற்காக பதிக்கப்பட்டுள்ள 18’’C.1 பகிர்மான குழாய்லிருந்து தெருக்களுக்கு செல்லும் பழைய பகிர்மான குழாய்கள் சுமார் 17 இடஙகளில் இணைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் பழைய பகிர்மான குழாய்களிலிருந்து கசிவு நீர் குடிநீர் இணைப்புகளுக்கு சென்று கொண்டிருப்பதாலும், மேலும் மேற்காணும் பழைய பகிர்மான குழய்கள் இதுவரை துண்டிக்கப்படாததால் தற்போது 17 இடஙகளில் குழாயில் 1மீ அளவு துண்டிப்பு செய்து அடைக்கும் பணியினை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1,10,000/–க்கும் அஙகீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 183 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 41</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்– 05**

இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி கொசுப்புழு அழிப்பு பணிக்கு தேவையான அபேட், முதிர் கொசுக்களை அழிப்பதற்கு தேவையான பைரித்திரம் மற்றும் மாலத்தியான் மருந்துகள் இருப்பு குறைவாக உள்ளதால், அபேட் (Temephos 50% E.C) – 500 லிட்டர், பைரித்திரம் (Phyrethrum 2% E.C) – 500 லிட்டர் மற்றும் மாலத்தியான் (Malathion Technical Grade 95%) - 200 லிட்டர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசு மருத்துவ கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கி வழங்கவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.10.00/- இலட்சத்திற்கும் (பத்து இலட்சம் மட்டும்) அங்கீகாரத்திற்காக.

மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் டெங்கு தடுப்பு அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 02.02.2018 அன்று முன்அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.427/2018/எச்1)**

**தீர்மானம் எண். 42**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்– 06**

இந்நகராட்சியில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் டெங்குகாய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி பணிக்கு தேவைப்படும் பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள் மற்றும் பினாயில் இருப்பு குறைவாக உள்ளதால், இந்நகராட்சிப் பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான 3000 கிலோ பிளிச்சிங் பவுடர், 10,000 கிலோ சுண்ணாம்புத்தூள் மற்றும் 200 லிட்டர் பினாயில் '0.1114 கடையநல்லூர் கூட்டுறவு பண்டகசாலை, கடையநல்லூர்" என்ற நிறுவனத்தின் மூலம் தரம் குறித்த சான்றுடன் வாங்கவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.2,50,000/-(இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)க்கும் அங்கீகாரத்திற்காக.

மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 02.02.2018 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் விநியோக உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.4143/2017/எச்1)**

**தீர்மானம் எண். 43**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்– 07**

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் 28.01.2018ம் தேதிய நேரடி அறிவுரையின்படி, இந்நகராட்சிப் பகுதியில் உள்ள 30,000 வீடுகளில் டெங்கு விழிப்புணர்வு வாசகம் அடங்கிய ஸ்டிக்கர்கள் 30,000 எண்ணம் மற்றும் கொசுப்புழு ஆய்வு செய்வதை குறிக்கும் படிவங்கள் (ஸ்டிக்கர்கள்) 30,000 எண்ணமும் பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் டெங்கு நோய்த்தடுப்பு அத்தியாவசியம் கருதி புளியங்குடி சர்வோதயா சங்கம் மூலம் அச்சடித்து வழங்கவும்அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.96,000/-(ரூபாய் தொன்னூத்தாராயிரம் மட்டும்) க்கும் அங்கீகாரத்திற்காக.

மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் டெங்கு தடுப்பு அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களிடம் 02.02.2018 அன்று முன்அனுமதி பெற்று டெங்கு விழிப்புணர்வு வாசகம் அடங்கிய ஸ்டிக்கர்கள் மற்றும் கொசுப்புழு ஆய்வு செய்வதை குறிக்கும் ஸ்டிக்கர்கள் அச்சடித்து வழங்க விநியோக உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவுத்தொகையினை வழங்கியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.566/2018/எச்1)**

**தீர்மானம் எண். 44**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்–08**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான உள்புறம் மற்றும் வெளிப்புறம் புகைப்பரப்பும் இயந்திரங்கள் (Indoor And Outdoor Fogging Machine) பத்து எண்ணங்கள் ரூ.7,00,000/-(ஏழு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் வாங்குவதற்கு தனி அலுவலர் அவர்கள் 25.01.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், 06.02.2018 அன்று தகுதிப்பெற்ற நிறுவனத்திடம் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | System Engineering,<br>No.1, Annai Sathya Nagar Main Road,<br>Senthamil Nagar, Ramapuram,<br>Chennai – 600 089. | ரூ.69,000/- |
| 2. | S.N.Enterprises,<br>6/1, Rajaji Avenue,<br>Valasaravakkam,<br>Chennai – 600 087. | ரூ.72,000/- |

அ) வரப்பெற்ற மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் உள்புறம் மற்றும் வெளிப்புறம் புகைப்பரப்பும் இயந்திரங்கள் (Indoor And Outdoor Fogging Machine) ஒன்றுக்கு ரூ.69,000/- கொடுத்துள்ள வரிசை எண்.1-ல் கண்ட System Engineering, No.1, Annai Sathya Nagar Main Road, Senthamil Nagar, Ramapuram, Chennai – 600 089. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு உள்புறம் மற்றும் வெளிப்புறம் புகைப்பரப்பும் இயந்திரங்கள் பத்து எண்ணங்கள் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக.

ஆ) மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் டெங்கு தடுப்பு அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 06.02.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி உள்புறம் மற்றும் வெளிப்புறம் புகைப்பரப்பும் இயந்திரங்கள் (Indoor And Outdoor Fogging Machine) பத்து எண்ணங்கள் வாங்குவதற்கு விநியோக உத்தரவு வழங்கியதற்கும் செலவுத் தொகை வழங்கியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.393/2018/எச்1)**

**தீர்மானம் எண். 45**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்– 09**

இந்நகராட்சிப் பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு 2017-2018 ஆம் ஆண்டிற்கு தேவையான தளவாட சாமான்கள் கீழ்கண்ட விபரப்படி வாங்கி வழங்கவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.9,50,000/-ஐ பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

| வ.எண் | தளவாடச்சாமான்கள் | எண்ணம் |
|---|---|---|
| 1 | மண்வெட்டி | 150 |
| 2 | பிளாஸ்டிக் சாந்து சட்டி | 100 |

| | | |
|---|---|---|
| 3 | தெரு குப்பை வாங்கும் டப்பா | 350 |
| 4 | குப்பை அள்ளும் மூங்கில் கூடை | 120 |
| 5 | இரும்பு வாளி | 100 |
| 6 | குப்பை அள்ளும் தகடுகள் | 150 |
| 7 | ஓடைக்கரண்டி | 100 |
| 8 | வெட்டருவாள் | 50 |
| 9 | துாப்புமாறு | 350 |
| 10 | பிரஷ் | 150 |
| 11 | கைமுள் கரண்டி | 100 |
| 12 | ஆட்டரிவாள் | 100 |
| 13 | 1" கடப்பாறை | 30 |

**(ந.க.எண்.565/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 46</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 10</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான வாகனத்தில் பொருத்தி புகைப்பரப்பும் இயந்திரங்கள் (Vehicle Mount Type Fogging Machine) இரண்டு எண்ணம் ரூ9,80,000/-(ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் வாங்குவதற்கு தனி அலுவலர் அவர்கள் 25.01.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், 06.02.2018 அன்று தகுதிப்பெற்ற நிறுவனத்திடம் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | System Engineering,<br>No.1, Annai Sathya Nagar Main Road,<br>Senthamil Nagar, Ramapuram,<br>Chennai – 600 089. | ரூ.4,75,800/- |
| 2. | S.N.Enterprises,<br>6/1, Rajaji Avenue,<br>Valasaravakkam,<br>Chennai – 600 087. | ரூ. 4,99,500/- |

அ) வரப்பெற்ற மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வாகனத்தில் பொருத்தி புகைப்பரப்பும் இயந்திரம் (Vehicle Mount Type Fogging Machine) ஒன்றுக்கு ரூ.4,75,800/- கொடுத்துள்ள வரிசை எண்.1-ல் கண்ட System Engineering, No.1, Annai Sathya Nagar Main Road, Senthamil Nagar, Ramapuram, Chennai – 600 089. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வாகனத்தில் பொருத்தி புகைப்பரப்பும் இயந்திரங்கள் (Vehicle

Mount Type Fogging Machine) இரண்டு எண்ணம் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக.

ஆ) மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் டெங்கு தடுப்பு அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 06.02.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி வாகனத்தில் பொருத்தி புகைப்பரப்பும் இயந்திரங்கள் (Vehicle Mount Type Fogging Machine) இரண்டு எண்ணங்கள் வாங்குவதற்கு விநியோக உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவுத் தொகை வழங்கியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.353/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 47</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 11</u>**

கடையநல்லூர் நகராட்சி பராமரிப்பிலுள்ள நகராட்சி பள்ளி சத்துணவு மையங்களில் அமைப்பாளராக பணிபுரிந்து கீழ்கண்ட விபரப்படி பணி ஓய்வு பெற்ற அமைப்பாளர்களுக்கு சிறப்பு சேமநல நிதி நிர்வாக பங்குத் தொகை ஒருநபருக்கு ரூ.10000/– வீதம் வழங்க அனுமதிக்காகவும், அங்கீகாரத்திற்காகவும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் ம்தவி | பள்ளி சத்துவணவு மையத்தில் பெயர் | பணி ஓய்வு பெற்ற நாள் |
|---|---|---|---|
| 1 | திருமதி. ரமணி முருகேசன், அமைப்பாளர் | நகராட்சி துவக்கப் பள்ளி மேலக்கடையநல்லூர் | 31.05.2013 |
| 2 | திருமதி. பி. பொன்னுத்தாய் அமைப்பாளர். | நகராட்சி நடுநிலைப் பள்ளி பேட்டை | 31.05.2014 |

**(ந.க.எண். 4777/2017/சி1)**

**<u>தீர்மானம் எண். 48</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 12</u>**

சட்டமன்ற உறுப்பினர் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி அவர்கள் இந்நகராட்சி பகுதிக்கு வருகை தந்து வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள தெருக்களில் நேரடியாக ஆய்வு செய்த மின்கம்பங்களில் தெருவிளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் பொதுமக்கள் பெரும் இடையூறு மற்றும் ஆபத்துகளுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே இந்நகராட்சிப் பகுதிகளிலுள்ள பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு தெருவிளக்குகள் இல்லா மின் கம்பங்களுக்கு உடன் தெரு விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்க்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்கள். மேலும் இந்நகராட்சிப் பகுதியிலிலுள்ள பொதுமக்களிடமிருந்து தெருவிளக்குகள் இல்லா மின் கம்பங்களுக்கு புதிதாக தெருவிளக்குகள் அமைக்க கோரி தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. ஆகவே அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் தெருவிளக்குகள் இல்லாத மின் கம்பங்களுக்கு முதற்கட்டமாக ரூ.10.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் மின் சேமிப்பிற்காக LED மின் விளக்குகள் வாங்கி பொருத்துவதற்கு தனி அலுவலரின் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 581 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 49</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 13</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை 01.05.2017 முதல் 30.04.2018 வரை மேற்க் கொள்ள தனியார் நிறுவனமான M/S ஆகாஷ் இன்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு

செயல்முறை ஆணை உத்திரவு வழங்கப்பட்டு தெரு விளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஒப்புதல் கடித ந.க.எண்.13899/2016/DO1, நாள்.02.03.2017ம் தேதிய கடிதத்தில் தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை தனியார் நிறுவனம் மூலம் ஒராண்டிற்கு மேற்கொண்டு மீண்டும் உரிய அனுமதிப் பெற்று மேற்காணும் தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்பயைில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் இயக்குநர் மற்றும் பராமரிப்பு பணியினை தனியார் நிறுவனமான ஆகாஷ் இஞ்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடேட், சென்னை நிறுவனம் மூலம் கடந்த 01.05.2017 முதல் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு 30.04.2018ம் தேதியுடன் ஒராண்டு காலம் முடிவடைகிறது. இந்நிலையில் மீண்டும் 01.05.2018 முதல் 30.04.2019ம் வரை ஓராண்டு காலத்திற்கு 2017–2018ம் ஆண்டு விலை விகிதத்தில் 10% விலை உயர்வு செய்து தனியார் நிறுவனமான M/S ஆகாஷ் இன்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை நிறுவனம் மூலம் தொடர்ந்து மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் கால நீட்டிப்பு உத்திரவு பெற வேண்டி கடிதம் அனுப்பவும் அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

(ந.க.எண். 5130 /2016/இ1)

**<u>தீர்மானம் எண். 50</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 14</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்கள் இந்நகராட்சிப் பகுதிக்கு டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணிகள் தொடர்பாக 28.01.2018ம் தேதிய நேரடி ஆய்வின் போது தெரிவித்துள்ள அறிவுரையில் டெங்குகாய்சசல் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளான ரகுமானியாபுரம் வார்டு எண்.32 பேட்டை பகுதிகளான வார்டு எண்.28 முதல் 31 வரை மேலக்கடையநல்லூர் வார்டு எண்.22, கிருஷ்ணாபுரம் வார்டு எண்.1, 4 மற்றும் முத்துக்கிருஷ்ணாபுரம் பகுதிகளில் உள்ள காலி இடங்கள் மற்றும் காலிமனைகளிலுள்ள புல், புதர், செடி கொடிகள், முள் மரங்கள் மற்றும் குப்பைகளை உடனடியாக JCB இயந்திரங்களை பயன்படுத்தி விரைவாக அப்புறப்படுத்தப் பட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். அதனாடிப்படையில் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் இந்நகராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பாதிக்கப்பட்ட மேற்காணும் பகுதிகளில் காலி இடங்கள் மற்றும் காலிமனைகளிலுள்ள புல், புதர், செடி கொடிகள், முள் மரங்கள் மற்றும் குப்பைகளை ரூ.9,90,000/– உத்தேச மதிப்பீட்டில் JCB இயந்திரம் மூலம் முற்றிலுமாக அகற்றிட அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு JCB இயந்திரம் மூலம் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி தனி அலுவலர் 30.01.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பத்தக்காரர்களிடம் நேரடியாக விலைப்புள்ளிகள் பெற்று டெங்கு காய்ச்சல் அதிகமாக பாதிக்கப்பட்ட இடங்களான ரகுமானியாபுரம் வார்டு எண்.32, பேட்டை பகுதி வார்டு எண்.28 முதல் 31, இந்திர நகர் வார்டு எண்.22 மற்றும் வார்டு எண்.1 மற்றும் 4 ஆகிய பகுதிகளில் உள்ள புல், புத., செடி, கொடிகள், முள் மரங்கள் மற்றும் குப்பை கழிவுகள் அகற்ற நடவடிக்கை மேற்க் கொள்ளவும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

(ந.க.எண். 373 /2018/இ1)

**<u>தீர்மானம் எண். 51</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 15</u>**

இந்நகராட்சி தலைமை பணியிடத்தில் 07.12.2017 அன்ற இரவு ஏற்பட்ட பயங்கர காட்டாத்து வெள்ள பெருக்கினால் தலைமை பணியிடத்திலுள்ள 35.00 HP Vertical Turbine Pump & motor முற்றிலும் பழுதாகி இயக்க முடியாத நிலையில் உள்ளது. மேலும் மேற்காணும் மோட்டாரில் உள்ள Start delta starter, மற்றும் cable, Room list wiring ஆகியவை melt ஆகி உள்ளது. மேலும் ஆற்று படுகையில் உள்ள 50KVA

ஜெனரேட்டர் voltage vcriation ஆவதால் அதில் உள்ள carban and Dynoma, Self mortor, Alter motor ஆகியவற்றை சரி செய்யவும் மற்றும் Engine oil, filter Kit மாற்றப்படவேண்டும். ஆகவே மேற்காணும் பணிகளை குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டு மேற்க் கொண்டால்தான் நகருக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலும் என்பதால் மேற்காணும் பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.4,25,000/–க்கு அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றம் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் இந்நகராட்சி தனி அலுவலர் 07.02.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் பணிகளை மேற்கொள்ள நேரடியாக விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 173/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 52</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 16</u>**

இந்நகராட்சிப்பகுதியில் டெங்கு காய்ச்சல் அதிகமாக பாதிக்கபட்ட பகுதிகளான வார்டு 32 ரகுமானியபுரம், வார்டு 28 முதல் 31 வரை பேட்டை பகுதி, வார்டு 22 மேலக்கடையநல்லூர், வார்டு 4 கிருஷ்ணாபுரம், முத்துகிருஷ்ணாபுரம் பகுதிகளில் உள்ள காலிமனையில் உள்ள புல், புதர், செடி, கொடிகள், முள்மரங்கள் மற்றும் குப்பைகளை உடனடியாக JCB இயந்திரம் பயன்படுத்தி உடனடியாக டெங்கு காய்ச்சல் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும், பொதுமக்கள் நலனை கருத்திற் கொண்டும் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்க்கொள்ள தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் 30.01.2018 அன்று நேரடியாக விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. A.P.M.A. காஜா<br>ஒப்பந்தகாரர்,<br>கடையநல்லூர். | ரூ.750 /– |
| 2. | திரு. P.ஆயிஷா<br>ஒப்பந்தகாரர்,<br>கடையநல்லூர். | ரூ800/– |
| 3. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>(பவர் ஏஜெண்ட்),<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.850/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. A.P.M.A. காஜா என்ற ஒப்பந்தக்காரர் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு இந்நகராட்சிப்பகுதியில் டெங்கு காய்ச்சல் அதிகம் பாதிக்க வாய்ப்புகள் அதிகமுள்ள வார்டு 32 ரகுமானியபுரம், வார்டு 28 முதல் 31 வரை பேட்டை பகுதி, வார்டு 22 மேலக்கடையநல்லூர், வார்டு 4 கிருஷ்ணாபுரம், முத்துகிருஷ்ணாபுரம் பகுதிகளில் உள்ள காலிமனையில் உள்ள புல், புதர், செடி, கொடிகள், முள்மரங்கள் மற்றும் குப்பைகளை உடனடியாக JCB இயந்திரங்கள் பயன்படுத்தி அகற்றும் பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத்தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 373 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 53</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 17</u>**

இந்நகராட்சி குடிநீர் அபிவிருந்தி திட்டத்தின் கீழ் தாமிரபரணி உள்ள TWAD SUMP ல் பொருத்தப்பட்டுள்ள 35.00 HP மோட்டார் ஸ்டார்டர் 2 எண்ணம், 25.00 HP மோட்டார் ஸ்டார்டர் 2 எண்ணம் மற்றும் 35.00 HP மோட்டார் 1 எண்ணம், தலைமை நீரேற்றும் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள 35.00 HP மோட்டார் ஸ்டார்டர் 2 எண்ணம், பெரியநாயக்கன் கோவில் அருகில் TWAD SUMP ல் பொருத்தப்பட்டுள்ள 15.00 HP மோட்டார் ஸ்டார்டர் 2 எண்ணம், ஆகியவை பழுதடைந்து உள்ளதை ரூ.495000/– உத்தேச மதிப்பீட்டில் பழுதடைந்த மோட்டாரை பழுதுநீக்கம் செய்யுவும் மற்றும் ஸ்டார்டரை புதிதாக மாற்றம் செய்யும் பணிக்கு இந்நகராட்சி தனிஅலுவலர் 05.02.2018 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும், பொதுமக்கள் நலனை கருத்திற் கொண்டும் உள்ளூரில் தகுதி பெற்ற நிறுவனங்களிடம் 05.02.2018 அன்று நேரடியாக விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு, மதுரா மில் ஸ்டோர்.<br>146டி, மெயின் ரோடு,<br>கடையநல்லூர். | ரூ.493930 /– |
| 2. | திரு, திருப்பதி மில் ஸ்டோர்.<br>313, மெயின் ரோடு,<br>கடையநல்லூர். | ரூ.494810/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு, மதுரா மில் ஸ்டோர், 146டி, மெயின் ரோடு, கடையநல்லூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு, இந்நகராட்சி குடிநீர் அபிவிருந்தி திட்டத்தின் கீழ் மேற்காணும் மூன்று இடங்களில் TWAD SUMP ல் பொருத்தப்பட்டுள்ள 35.00 HP மோட்டார் ஸ்டார்டர் 4 எண்ணம், 25.00 HP மோட்டார் ஸ்டார்டர் 2 எண்ணம், 15.00 HP மோட்டார் ஸ்டார்டர் 2 எண்ணம் மற்றும் 35.00 HP மோட்டார் 1 எண்ணம், ஆகிய பழுதடைந்த மோட்டார் மற்றும் ஸ்டார்டரை பழுதுநீக்கம் செய்து பொருத்தும் பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத்தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 173 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 54</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 18</u>**

இந்நகராட்சி தலைமை பணியிடத்தில் (Head- works) உள்ள இரண்டாற்று முக்கு Infilteration well மற்றும் அதன் அருகிலுள்ள திறந்தவெளி கிணறு ஆகிய இரண்டு கிணற்றிலிருந்து வரும் உந்து குழாயில் Galiery அருகில் மண் அடைப்பு எற்ப்பட்டு தற்போது Pumping பண்ண முடியாத நிலை உள்ளது. இதனால் Collection Sumpக்கு வரும் குடிநீரின் அளவு குறைந்து பாதிப்பு அடைந்துள்ளது. மேலும் நகருக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொது மக்களின் நலனினை கருத்திற் கொண்டும் குடிநீர் குழாய் இணைப்பிலுள்ள அடைப்பினை ரூ.1,15,000/– உத்தேச மதிப்பீட்டில் சரி செய்ய அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 519 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 55</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 19**

இந்நகராட்சி தலைமை பணியிடத்தில் உள்ள 35.00HP Vertical Turbine Pump & Motor முற்றிலும் பழுதாகி இயக்க முடியாத நிலையில் உள்ள மோட்டாரினையும் மேலும் மோட்டாரில் பொருத்தப்பட்டுள்ள Star Delta Starter மற்றும் Cable, Room Light Wiring melt ஆகி பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதையும் மற்றும் ஆற்று படுகையில் உள்ள 50 KVA Genset Voltage variation ஆவதால் அதில் உள்ள Carban, Dynamo, Self Motor, Alternator, Engine oil, FilterKit, மாற்ற வேண்டும். ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும், பொதுமக்கள் நலனை கருத்திற் கொண்டும் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்கொள்ள தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் 07.02.2018 அன்று நேரடியாக விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>(பவர்ஏஜெண்ட்),<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.424100 /– |
| 2. | திரு. G. முருகன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.426800/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக் (பவர்ஏஜெண்ட்) என்ற ஒப்பந்தக்காரர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு இந்நகராட்சி தலைமை பணியிடத்தில் உள்ள 35.00HP Vertical Turbine Pump & Motor, மோட்டாரில் பொருத்தப்பட்டுள்ள Star Delta Starter,Cable, Room Light Wiring மற்றும் ஆற்று படுகையில் உள்ள 50 KVA Genset ல் Carban, Dynamo, Self Motor, Alternator, Engine oil, FilterKit ஆகிய பழுதடைந்த மோட்டார், ஸ்டார்டர் மற்றும் 50 KVA Genset ஐ பழுதுநீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத்தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 183 /2018/இ1)**

**தீர்மானம் எண். 56**

அங்கீகரிக்கப்படுகிறது.

**தனி அலுவலர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**